 **SRES**  **NFIR** 

## மத்திய சங்கம் – பெரம்பூர்

# 2022 புத்தாண்டு, பொங்கல் மற்றும் குடியரசு தின நல்வாழ்த்துக்கள்

அன்பார்ந்த தொழிலாள சகோதர, சகோதரிகளுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் **2022ம் ஆண்டின் இனிய புத்தாண்டு, பொங்கல், குடியரசு தின நல்வாழ்த்துக்களை** SRES - NFIR **தெரிவிக்கிறது.** 07–02–1919 ஆம் ஆண்டு பெரம்பூரில் SRES துவங்கப்பட்டு 3–9–1927ஆம் ஆண்டு அண்ணல் மகாத்மா காந்தி மற்றும் கஸ்தூரிபாய் அம்மையார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தொழிலாளர்களின் பேராதரவோடு அடியெடுத்து வைத்து நூற்றாண்டின் நிறைவு விழாவை 07.02.2020 அன்று தொழிலாளர்களின் பேராதரவோடு கொண்டாடிய சங்கம் SRES. நாடு விடுதலை பெற SRES சுதந்திர போராட்டத்தில் முழுமையாக அர்ப்பணித்து பல்வேறு போராட்டங்களை நடத்தி அன்று முதல் இன்று வரை பல்வேறு நன்மைகளை பெற்று தருவது SRES.

பெரம்பூரில் உள்ள SRESன் மத்திய சங்க ஒற்றுமை நிலையத்திற்கு தேசிய தலைவர்களான திரு. **வல்லபாய் படேல்,** சட்ட மாமேதை **Dr. B.R. அம்பேத்கார், திரு. ஜவஹர்லால் நேரு, திரு. ஜெயபிரகாஷ் நாராயணன், திரு.K.காமராஜர், திருமதி. இந்திராகாந்தி, திரு.ராஜாஜி** போன்ற பலர் வருகை தந்து சிறப்பித்துள்ளார்கள். 1929 முதல் 1934 வரை SRESற்கு தலைவராக இருந்த **திரு.V.V.கிரி** அவர்கள் இந்திய நாட்டின் குடியரசு தலைவராக பொறுப்பேற்று பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிற்சங்கம் ஆரம்பித்த பிறகு வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்தும், சம்பள உயர்வு, வேலை நேரம், அலவன்ஸ்கள் என மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட **பல வேலை நிறுத்த போராட்டங்களால்** சிலர் வேலை இழந்தனர். துப்பாக்கி சூட்டில் சிலர் உயிரிழந்தனர். 25.10.1930 அன்று **திரு.வி.வி.கிரி** தலைமையில் சம்பள உயர்வு, அலவன்ஸ்கள் வேண்டுமென்று **மாபெரும் வேலை நிறுத்த போராட்டம்.** நைட் டியூட்டி அலவன்ஸ், OT அலவன்ஸ், ஒர்க்ஷாப் தொழிலாளர்களுக்கு இன்சென்டீவ், NFIR - PNM மூலமாக 1976ல் பதவி உயர்வுக்கான அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பேரில் (RWCT - 1976) இன்று டெக்னீசியன்கள் Gr.III, Gr.II, Gr.I, Sr.Tech என பதவி உயர்வு பெற்றுக் கொண்டிருப்பதற்கு SRES-NFIR தான் காரணம் என்பதை நினைவுபடுத்துகிறோம். PLB - போனஸ், வேலை நேரம் மற்றும் ரன்னிங் ஸ்டாப் அலவன்ஸ் போன்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி **2–10–1977ல் வேலைநிறுத்த போராட்டம்** நடைபெற்றது. இதில் SRES தலைவர் **திரு.T.V.ஆனந்தன்,** பொதுசெயலாளர் **G.இராஜராம்** மற்றும் 50 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். மாலை 6 மணி வரை இரயில்கள் நிறுத்தப்பட்டன. சதர்ன் இரயில்வே முழுவதும் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 1.12.1977 அன்று **குப்பம்** இரயில்வே ஸ்டேஷனில் **12 மணி நேரம் இரயில்கள் நிறுத்தப்பட்டன.** இதனடிப்படையில் 1979ல் முதல் போனஸை பெற்றோம். அலவன்ஸ்கள் மாற்றி அமைக்கப்பட்டன. இரயில்வே தொழிலாளர்களுக்காக பல்வேறு நன்மைகளை செய்து தன் வாழ்நாள் முழுவதும் தன்னலமின்றி உழைத்திட்ட தொழிற்சங்க மாமேதை மறைந்த **திரு. T.V.ஆனந்தன்,**Ex.M.P. அவர்களை நெஞ்சில் நினைத்து பார்க்கிறோம். அன்று இரயில்வே தொழிலாளர்களுக்காக பென்ஷன் திட்டத்தை அவர் கொண்டு வந்த போது தவறாக பேசியவர்கள் எல்லாம் பிறகு ஓய்வு பெற்று பென்ஷன் பெற்றதும் வியந்து பாராட்டினார்கள். மத்திய அரசின் தொழிலாள விரோத போக்கை கண்டித்தும், தனியார் மய போக்கை கண்டித்தும் SRES - NFIR அன்று முதல் இன்று வரை பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், நாடு தழுவிய அளவில் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை SRES தலைவரும், NFIRன் பொது செயலாளருமான **Dr.M. இராகவையாஜி** அவர்களின் கட்டளைக்கிணங்க நடத்தியதன் பயனாகத்தான் பல உத்திரவுகளை பெற்றுத்தந்தது SRES - NFIR என்பதை அனைவரும் அறிவீர்கள்.

## SRES - NFIR செய்த முக்கிய சாதனைகளில் சில..

1. பென்ஷன் / குடும்ப பென்ஷன் திட்டத்தை அமுல்படுத்தி தொழிலாளர்களை வாழ வைத்திருப்பது.
2. ஜஸ்டீஸ் ஜெகன்னாத்தாஸ் கமிட்டி மூலம் 6 மாதத்திற்கு ஒரு முறை DA உயர்வு பெற்றுத் தந்தது.
3. 1979ல் போனஸ் சட்டத்தை அமுல்படுத்தி அனைவருக்கும் PLB போனஸ் பெற்றுத்தந்தது மட்டுமல்லாமல் 2006 –07க்கு ரூ.2301/–, 2014–15க்கு ரூ.8976/– அரியர்ஸாகவும் பெற்று தந்தது.
4. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை CRC மூலம் அப்கிரேடேஷன் பெற்று தந்ததோடு, 21/2 ஆண்டுகளில் டெக்னீஷியன்களுக்கு மீண்டும் அப்கிரேடேஷன் பெற்றுத்தந்தது.
5. HRA, இன்சென்டிவ், OT அலவன்ஸ்களை பெற்று தந்தது.
6. ACP க்கு பிறகு MACPS மூலம் 3 அப்கிரேடேஷன்களை பெற்று தந்தது.
7. CCL, En Cashment Leave மற்றும் மாற்று திறனாளிகளுக்கு 4 நாட்கள் SCL பெற்று தந்தது.
8. LARSGESS திட்டத்தின் மூலம் வாரிசுகளுக்கு வேலை பெற்று தந்தது.
9. இரயில்வே தொழிலாளர்கள் அனைவருக்கும் AC கோச்சில் செல்ல பாஸ் பெற்று தந்தது.
10. இறந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட் பெற்று தந்தது.

**வெள்ளையனே வெளியேறு என போராட்டம் நடத்தினோம் அன்று!**

**இரயில்வேயையும், நாட்டையும் காப்பதற்கு ஓரணியில் திரளுவோம் இன்று!**

உலகத்திலே தலைசிறந்த இரயில்வேக்களில் 2ஆம் இடத்தில் இருந்து இந்திய மக்களுக்கு குறைந்த செலவில் சிறப்பான, பாதுகாப்பான போக்குவரத்து சேவையை செய்து வரும் இரயில்வேயை தனியாருக்கு தாரைவார்த்து சீரழிப்பதை SRES - NFIR வன்மையாக கண்டிக்கிறது. 2020 மார்ச் 25க்கு பிறகு லாக்டவுன் காலத்திலிருந்து இன்று வரை பணியின் போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிர்நீத்த இரயில்வே தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு குறைந்த பட்சம் ரூ. 50 லட்சம் வழங்க மத்திய அரசையும், இரயில்வே போர்டையும் வலியுறுத்துவதோடு, உயிர்நீத்த தொழிலாளர்களின் வாரிசுகளில் சிலருக்கு நிலுவையில் உள்ள CGA கம்பாஸினேட் அப்பாயின்ட்மெண்ட்டை உடனே வழங்க S.Rly., நிர்வாகத்தை SRES-NFIR வலியுறுத்துகிறது.

- 01.01.2004க்கு முன்பு தேர்வு செய்து 01.01.2004க்கு பிறகு பணியில் சேர்ந்த தொழிலாளர்கள் NPS யிலிருந்து OPS க்கு மாற்றம் செய்வதற்கான Rly. Bd., உத்தரவை முறையாக அமுல்படுத்த SRES-NFIR வலியுறுத்துகிறது.
- 01.01.2016க்கு பிறகு Promotion / MACPS பெற்றவர்களுக்கு ஆப்ஷன் அடிப்படையில் முன்கூட்டியே Increment வழங்க தாமதப்படுத்தாமல் Rly., Bd., உத்தரவை அமுல்படுத்த வலியுறுத்துகிறது. RBE No. 212/2019 & PBC No. 308/2019
- சூப்பர்வைஸர்களுக்கு GP 4800, 5400 (L8, L9) சம்பள உயர்வுக்கான உத்தரவை உடனே வெளியிட வலியுறுத்துகிறது.
- CRC கமிட்டியை அமைத்து பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடு!
- Track Maintainer களுக்கு பாதுகாப்பும், உரிய பதவி உயர்வும் வழங்கிடு!
- LDCE போன்ற தேர்வுகளை தவறுகளின்றி குறித்த நேரத்தில் நடத்தி பதவி உயர்வு வழங்கிடு!
- Risk & Hardship Allowanceகளை விடுபட்ட கேட்டகரி தொழிலாளர்களுக்கு வழங்கிடு !
- இரயில்வே நடத்துகின்ற அனைத்து விதமான தேர்வுகளுக்கும் Question Bankயை உடனே வழங்கிடு!
- Promotion / MACPS பாதிக்காதவாறு APAR ன் விவரங்களை ஒளிவு மறைவின்றி அனைவருக்கும் தெரியபடுத்து!
- SRES - NFIRன் தொடர் போராட்டத்திற்கிடையில் பென்ஷன்தாரர்களுக்கு PRCP மேனுவலாகவும், சர்வீஸில் உள்ள மாற்று திறனாளிகளுக்கு PASS/PTO மேனுவலாக வழங்குவதற்கு Rly. Bd.,யிடமிருந்து 29.11.21ல் பெற்றுத்தந்தது போல், பணியில் உள்ளவர்களுக்கும் மேனுவலாக வழங்க SRES - NFIR நடவடிக்கை எடுத்து வருகிறது,
- கொரோனாவை காரணம் காட்டி PLB போனஸ் வரவே வராது என சொன்னவர்கள் மத்தியில், இரயில் சேவையை புள்ளி விவரங்களோடு எடுத்து சொல்லி, வழங்காவிடில் வேலை நிறுத்தம் செய்வோம் என மத்திய அரசிடமும், இரயில்வே போர்டிடமும் SRESன் தலைவரும், NFIR ன் பொதுசெயலாளருமான டாக்டர். M.இராகவையா அவர்கள் ஆணித்தரமாக எடுத்துரைத்து பெற்றுத்தந்ததுதான் 2019–20 மற்றும் 2020–21 PLB போனஸ் என்பதை அனைவரும் அறிவீர்.
- உயர்த்தப்பட்ட Incentive 01.07.2017 முதல் வழங்க Rly. Bd.,யிடமிருந்து உத்தரவு பெற்றுத்தந்தும் S.Rly., ல் முழுமையாக அமுல்படுத்தவில்லை. CW, LW/PER, GOC மற்றும் S&T / PTJ பணிமனைகளில் ஜனவரி 2020 முதல் வழங்க வேண்டிய இன்சென்டிவ் அரியர்ஸை வழங்காததை கடந்த 12.12.2021 அன்று Rly. Bd., சேர்மனிடம் SRESன் தலைவரும், NFIR ன் பொதுசெயலாளருமான Dr.M.இராகவைய்யாஜி அவர்கள் பேசியதன் பயனாக ஆவண செய்வதாக உறுதி அளித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மத்திய மோடி அரசு இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டில் இணைத்ததோடு இரயில்வேயில் இருக்கின்ற காலியிடங்களை சரண்டர் செய்து வருவதும், தொழிலாளர்கள் செய்கின்ற வேலைகளை அவுட்சோர்சிங் செய்வதும், ரேபரேலியில் உள்ள MCF கார்ப்பரேட்டுக்கும், ICF, RCF, CLW, DLW, DMW, WAP போன்ற உற்பத்தி பிரிவுகளை IRRSC கம்பெனியாகவும், இராயபுரம் உள்ளிட்ட 5 பிரிண்டிங் பிரஸ்கள் மூடுவதற்கும், மருத்துவமனைகள், பள்ளிகள், ஒர்க்ஷாப்கள், ஒபன்லைன், RPF உள்ளிட்ட பிரிவுகளை தனியாருக்கு தாரை வார்ப்பதை வாபஸ் பெற, வேகன்சிகளை நிரப்புவதாக சொல்லி RRB, RRCகளை மூடுவதை தவிர்த்திட வலியுறுத்தி SRES-NFIR தொடர்ந்து நாடு தழுவிய அளவில் தொடர் போராட்டம் நடத்தி வருகிறது.

150 பயணிகள் இரயில் வண்டிகளை தனியார்க்கு தாரைவார்ப்பதை ● இரயில் நிலையங்களை பராமரிக்கும் பணியை தனியாருக்கு கொடுப்பதை ● புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்ய மறுப்பதை ● 7வது ஊதியக்குழுவில் உள்ள குறைபாடுகளை நீக்கி சம்பள உயர்வு வழங்க மறுப்பதை ● 55 வயது (அ) 30 வருட சர்வீஸ் செய்தவர்களுக்கு கட்டாய ஓய்வு கொடுப்பதை ● 60 வயது (அ) 33 வருட சர்வீஸ் முடித்த தொழிலாளர்களுக்கு ஓய்வு கொடுப்பதை ● குத்தகை பெயரில் இரயில்வே இடங்களை தனியாருக்கு தாரைவார்ப்பதை ● பயிற்சி முடித்த ஆக்ட் அப்ரண்டீஸ்களுக்கு வேலை வழங்க மறுப்பதை ● இரயில்வே போர்டை ரீஸ்டெக்சரிங் செய்து INDIAN RAILWAY MANAGEMENT SYSTEM என மாற்றுவதை ● 18 மாத DA/DR முடக்கியதை ● NDAக்கு சீலிங் வைத்ததை ● OTA மற்றும் TA 50% குறைப்பதை ● PASS/PTO வழங்கும் முறையை E PASS ஆக மாற்றியதை ● DA கணக்கிடும் முறையை மாற்றி DAவை குறைப்பதை ● 8 மணி நேர வேலையை 12 மணிநேரமாக உயர்த்துவதை ● தொழிலாளர் நலச்சட்டங்களை மாற்றுவதை மேலும் பலவற்றை கலந்தாலோசிக்காமல் தான்தோன்றிதனமாக செயல்படுத்தும் மத்திய அரசை கண்டித்தும், நாசகார திட்டத்தை உடனே வாபஸ் பெற வலியுறுத்தியும் SRES-NFIR தொடர்ந்து போராடி வருகிறது.

## வேலை நிறுத்தமும் ... SRES - NFIR ன் தொடர் போராட்டமும் ...

2020 நவம்பர் 26 முதல் டெல்லியில் கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல், கொரோனா பரவலையும் பாராமல் விவசாய பெருங்குடி மக்கள் நடத்திய தொடர் போராட்டத்தினால் மத்திய அரசு பணிந்து பாதகமான 3 வேளாண் சட்டங்களை ரத்து செய்தது. அதே போன்ற இந்திய இரயில்வேயையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க INTUC உள்ளிட்ட மத்திய தொழிற்சங்கங்கள் இணைந்து நாடு தழுவிய அளவில் **2022 பிப்ரவரி 23 மற்றும் 24 தேதிகளில்** நடத்தவுள்ள **வேலை நிறுத்த போராட்டத்தில் சங்கபேதமின்றி அனைவரும் பங்கு கொள்ள தயாராவோம்.. இரயில்வேயை மீட்டெடுப்போம்... நாட்டு மக்களை பேணிக்காப்போம்...**

**உண்மைகளை சொல்லி நன்மைகளை செய்து வரும் (NFIR) பெடரேஷன் உள்ள தொழிற்சங்கமான**

**SRESக்கு இரயில் என்ஜின் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச்செய்வீர்.**

| | | | |
|---|---|---|---|
| **Dr.M.இராகவைய்யாஜி**<br>**President/SRES & GS/NFIR** | அறிக்கை எண் **1226** | **28.12.2021** | **P.S.சூரியபிரகாசம்**<br>**GS / SRES & JGS/NFIR** |

**For More Details : sresindia.org & Click SRES Circulars.**



Essbeekay Press, Ch-23 Ph : 9444007242